# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 62/2016**

பெயர்: **சேகர்** நாள்: 18.08.2025

பி.வா.சா.1 – வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

பி.வா.சா.1 – சேகர் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 12:45</u>

நான் வாங்கிய 11 செண்ட் நிலத்தின் செக்குபந்தி என்ன என்று எனக்கு தெரியுமா என்றால், பத்திரத்தில் தான் உள்ளது தற்போது என்னால் கூற இயலாது. நான் கிரயம் வாங்கிய நிலத்தை காலியாக வைத்துள்ளேனா அல்லது பயிர் செய்து வருகிறேனா என்றால், வீடு மற்றும் காலி இடம் தான் உள்ளது பயிர் செய்யவில்லை. நான் வாங்கிய நிலத்திற்கு கிழக்கில் பாதை ஏதும் உள்ளதா என்றால், மனைபிரிவு செய்து விற்றாற்கள் ஆனால் எனக்கு அதில் உரிமை இல்லை. நான் கடைசியாக நிலத்தை எப்பொழுது சென்று பார்த்தேன் என்றால், சுமார் 20 நாட்களுக்கு முன்பாக சென்றேன். எனக்கு கிழக்கு திசையில் எந்த பாதையும் இல்லை என்றால், சரிதான். எனது நிலத்திற்கு வடக்கு மற்றும் தெற்கில் பாதை ஏதும் இல்லை என்றால், சரிதான். எனது நிலத்திற்கு மேற்கில்தான் வீடு உள்ளது என்றால், சரிதான். அந்த வீட்டிற்கு பின்புறம் மேற்கில் பஞ்சாயத்து தார்ரோடு தென்வடலாக போகிறது என்றால், சரிதான். அந்த வீட்டில்தான் 1-ம் வாதி பச்சியம்மாள் வசித்து வருகிறார் என்றால், இல்லை ஆனால் ஏதோ ஒருநாள் வந்து செல்வார். அந்த வீட்டில் ஒரு அறை உள்ளது அதில் அவர் வந்து தங்கிவிட்டு செல்வார். நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும்,

அந்த வீட்டில்தான் பச்சியம்மாள் வசித்து வருகிறார் என்றால், சரியல்ல. அந்த வீடு இந்த நீதிமன்ற அறை அளவு இருக்குமா என்றால், பெரிய வீட்டில் நான் இருக்கிறேன், சிறிய அறையில் 1-ம் வாதி பச்சியம்மாள் இருக்கிறார். அந்த வீட்டின் அளவு சுமார் 30 அடி நீளம் மற்றும் 20 அடி அகலத்தில் இருக்கும் என்றால், சரிதான். அந்த வீட்டின் உள்பகுதியின் பின்புறத்தில் சுமார் 12 அடிக்கு 30 அடி நீளத்திற்கு தார்ஸ் வீட்டை ஒட்டி முன்புறம் சாய்வாக ஓட்டுக்கூரை அமைந்துள்ளது என்றால், சரிதான். அந்த 30 அடி நீளம் மற்றும் 20 அடி அகலத்தின் பெரும்பகுதியில் நான் உள்ளேன் என்றும், 1-ம் வாதி பச்சியம்மாள் சிறிய அறையில் இருப்பதாக நான் சொல்கிறேன் என்றால், அவ்வபோது 1-ம் வாதி பச்சியம்மாள் சிறிய அறையில் தங்கிவிட்டு செல்வார். நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், பச்சியம்மாள் தான் முழு வீட்டிலும் வசிக்கிறார் என்றால், சரியல்ல. நான் வாங்கியதாக சொல்லும் நிலத்திற்கு மேற்கு எல்லையில்தான் இந்த வீடு அமைந்துள்ளது என்றால், சரிதான். நான் வாங்கியதாக சொல்லும் வீட்டின் அளவு என்ன என்று தெரியுமா என்றால், தெரியாது ரெக்கார்டில் உள்ள அளவுதான். ரெக்கார்டில் 10 க்கு 11 அடி அளவுள்ள 110 சதுரடிகள் என்றும் மற்றும் RCC தார்ஸ் வீடு ஒன்று உள்ளதாகவும், கள்ளிகோட்டை ஓடு வேய்ந்த வில்லை வீடு ஒன்று இருப்பது என்றால், சரிதான். அந்த வீட்டின் வடபுற சுவரில் 1994-ல் அந்த வீடு கட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அதனை நான் பார்க்கவில்லை. அந்த வீடு பழைய வீடு என்றால், சரிதான். அந்த வீடு சுமார் 30 வருடம் பழைமையான வீடு என்றால், இருக்கலாம். எவ்வளவு அளவுள்ள வீட்டை நான் கிரயம் செய்தேன் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். வெங்கடேஸ்வரனுக்கு காலி நிலம்தான் பாத்தியப்பட்டது என்றும் அவரிடமிருந்து நான் வீட்டை கிரயம் பெற்றேன் என்றும்

எழுதிகொண்டேன் என்றால், வெங்கடேஸ்வரனின் பத்திரத்தில் வீடு இருக்கிறதா இல்லையா என்று எனக்கு தெரியாது. ஆனால் நான் இடத்தை பார்த்து வீட்டோடுதான் கிரயம் வாங்கினேன். அங்கு உள்ள வீடு ஒரே வீடுதான் என்றும் தனித்தனியாக இல்லை என்றால், சரியல்ல. நான் சொல்லும் இரண்டு வீட்டிற்கு இடையே எவ்வளவு இடைவெளி உள்ளது என்றால், இடைவெளி இல்லை ஒன்றாகத்தான் உள்ளது தடுப்பு அமைத்துள்ளோம். நான் வாங்கியதற்கு பிறகு தடுப்பு வைத்தேனா என்றால், இல்லை ஏற்கனவே இருந்தது. அந்த வீட்டை Sub Registrar மற்றும் Surveyor வந்து வீட்டை அளந்து கொடுத்தாறா என்றால், சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து வீட்டை பார்க்கதான் வந்தார்கள் அளப்பதற்காக அல்ல. வீட்டின் அளவை யார் பார்த்தது என்றால், பத்திரம் எழுதுபவர் பார்த்து அளந்து சொன்னார். யார் முன்னால்அளந்தார்கள் என்றால், என் முன்பும் கிரயம் கொடுத்த வெங்கடேஸன் முன்பும் சர்வேயர் அளந்து கொடுத்தார். நான் வாங்கிய நிலம் வெங்கடேஸனுக்கு காலிநிலம்தான் பாத்தியப்பட்டது என்றும் குடிப்பழக்கம் உள்ள வெங்கடேஸ்வரனிடம் நான் ஒரு பொது அதிகாரப்பத்திரம் பெற்று கொண்டு அதன்பின்னர் எனது மனைவியின் பெயரில் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திகொண்டேன் என்றும் பின்னிட்டு என்பெயருக்கு கிரயம் செய்தபோது வீட்டின் ஒரு பகுதியை மோசடியாக எழுதிப்பத்திரப் பதிவு செய்து கொண்டேன் என்றால், சரியல்ல. பொது அதிகாரம் பெற்றதும் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திகொடுத்ததும் உண்மை அதனை நான் இரத்து செய்துவிட்டேன். இந்த 11 சென்ட் நிலத்திற்கு மேற்கில் இருந்து வருவதற்கு எந்த வழியும் கிடையாது என்றால், சரிதான், என் பத்திரப்படி வழியில்லை. பஞ்சாயத்து ரோட்டிலிருந்து வருவதற்கும் பாதை ஏதும் இல்லாததால் இந்த வீட்டின் ஒருபகுதியை சுமார் 10 முதல் 11 அடி

அகலத்திற்கு சேர்த்து எனது பத்திரத்தில் எழுதிக்கொண்டு பின்னிட்டு அந்த வீட்டை இடித்துவிட்டு பாதை அமைத்துக்கொள்ளலாம் என்ற கெட்ட நோக்கத்தில் நான் மோசடியாக வீட்டின் ஒருபாகத்தை எழுதிக்கொண்டேன் என்றால், சரியல்ல.எனக்கு கிரயம் கொடுத்தவருக்கு எந்த உரிமையும் இல்லாதபோது எனக்கும் உரிமை இல்லை என்றும் நான் உரிமை இல்லாத வீட்டை எழுதிக்கொண்டேன் என்றால், சரியல்ல. வாதிகளுக்கு வீடு மற்றும் அதனுடன் உள்ள ஐந்தரை சென்ட் நிலம் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால், சரியல்ல. வாதிகளுக்கு வீடு மற்றும் நிலங்கள் ஏதும் உள்ளதா என்றாலும் ஐந்தரை சென்ட் நிலம் உள்ளதா என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் அரசியல் பிரமுகர் என்பதாலும், ரியல் எஸ்டேட் செய்து வருவதாலும் தடவழி இல்லாத 11 சென்ட் நிலத்தை வெங்கடேஸ்வரனிடம் இருந்து ஈனக்கிரயம் பெற்று கொண்டு நான் கிரயம்பெற்ற பத்திரத்தில் வெங்கடேஸ்வரனுக்கு உரிமை இல்லாத வீட்டுப்பகுதியை சேர்த்து எழுதிக்கொண்டு அப்பாவி வாதிகளை அந்த இடத்தை விட்டு விரட்டவும் நில அபகரிப்பு செய்வதிலும் ஈடுபட்டுள்ளேன் என்றால், சரியல்ல. வாதிகள் இந்த வழக்கில் கேட்டுக்கொண்டபடி அவர்களுக்கு உரிமையான வழக்கு சொத்து அவர்களுக்கே கிடைக்கவேண்டியது என்றால், சரியல்ல. வீட்டின் முழுபகுதியும் வாதிகளுக்குதான் உரிமையானது என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 01:25

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R
Digitally signed by ELAMATHI R
Date: 2025.08.18 17:16:09 +1000

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.